

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், படியூர் ஊராட்சி, படியூரில் கனிமம் மற்றும் சுரங்கம் நிதியின் கீழ் தார்சாலை மற்றும் பேவர் பிளாக், சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, ஒன்றிய கழகச் செயலாளர் கே.கே.சிவானந்தம், ஊராட்சி மன்றத் தலைவர் ஜீவிதா சண்முகசுந்தரம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### வைக்கம் பெரியார் நினைவகம் உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டங்களில்

# மின் இணைப்பு அமைப்புகள் சிறப்பாக இருந்தன!

## பொதுப்பணித் துறை மின் பொறியாளர்களின் கருத்தரங்கில் - அமைச்சர் எ.வ.வேலு பாராட்டு!

சென்னை, டிச. 20 -

சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை தலைமை அலுவலகக் கூட்டரங்கில், பொதுப்பணிகள், அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், நேற்று முன்தினம் (18.12.2024) பொதுப் பணித்துறையின் மின் பொறியாளர்களின் தொழில் நுட்பக் கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் அமைச்சர் எ.வ.வேலு கருத்தரங்கத்திற்கு வருகை தந்த பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், மின்பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களை வரவேற்று தொழில்நுட்பக் கருத்தரங்கை தொடங்கி வைத்து, உரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

தமிழ்நாடு பொதுப்பணித் துறையின் மூலம் கட்டப்படும் புதிய வானுயர்ந்த கட்டடங்கள், ஒளிர்வதும், மிளிர்வதும் மின் அலகின் பங்களிப்பில் தான். மின் அலகு துவங்கப்பட்ட போது, மின் விளக்குகள், மின் விசிறிகள் என இருந்த மின் பணிகள், தற்போது, தொழில்நுட்ப பரிணாம வளர்ச்சியின் காரணமாக, பன்மடங்கு உயர்ந்து, வளர்ந்து, மின் தூக்கி (Lift), மின் மாற்றி (Transformer), மின்னாக்கி (Generator), குளிர்சாதன வசதி (AirConditioning), கண்காணிப்பு புகைப்படக் கருவி (CCTV), உயர் கோபுர விளக்குகள் (High Mast light), பாலங்களில் மின் விளக்குகள் பொருத்துதல், தடையற்ற மின்சாரம் வழங்குதல் (UPS) போன்ற சிறப்பு வாய்ந்த மின் பணிகளை உள்ளடக்கி பரந்து விரிந்து உள்ளது என்றும், இவைத்தவிர, மிக முக்கிய பிரமுகர் / முக்கிய பிரமுகர் ஆகியோர் தமிழகத்திற்கு வருகை தரும்போது, ஒளி, ஒலியமைப்பு (Public Address System) உள்ளிட்ட அனைத்து மின் பணிகளும் சிறப்பாக மின் பொறியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

மின் பணிகள் அனைத்தும் மிக நுணுக்கமான முறையில் மத்திய மின்சார ஒழுங்கு முறை ஆணைய (Central Electricity Act) விதிமுறைகளின் படி, மின் சாதனங்களுக்கும், மக்களுக்கும் உண்டான பாதுகாப்பினை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு பொதுப்பணித்துறையில் உள்ள மின் அலகினை திறம்பட சீரிய முறையில் செவ்வனே செயல்படுவதற்கு, கோயம்புத்தூர் மண்டல இணைத் தலைமைப் பொறியாளர் (மின்) பணியிடம், முதன்மைத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் துணைத் தலைமைப் பொறியாளர் (மின்) நிரந்தரப் பணியிடம், பொதுப்பணித்துறையில் உள்ள மின் பிரிவினை மேம்படுத்துவதற்கு 151 புதிய நிரந்தரப் பணியிடங்கள் உருவாக்கப்பட்டது.

**புதிய மின் கோட்டங்கள்!**

மேலும், 5 புதிய மின் கோட்டங்கள், 15 புதிய மின் உப கோட்டங்கள், 3 புதிய வானொலி உபகோட்டங்கள், 10 புதிய மின் பிரிவுகள், திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டத்தில் 1 மின் அலகு போன்ற புதிய மின் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டது.

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், தமிழ்நாடு பொதுப்பணித்துறையில் தற்போதுவரை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக, 49 உதவிப் பொறியாளர்கள் புதியதாக தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 1 இணை தலைமை பொறியாளர் (மின்), 17 செயற் பொறியாளர்கள் (மின்), 34 உதவி செயற் பொறியாளர்கள் (மின்), 18 இளநிலைப் பொறியாளர்கள் (மின்), 8 முதுநிலை வரைதொழில் அலுவலர் (மின்), 8 வரைதொழில் அலுவலர்கள் (மின்), 16 இளநிலை வரை தொழில் அலுவலர் (மின்), 10 தொழில்நுட்ப உதவியாளர்கள் (மின்) போன்ற 112 மின் பணி யிடங்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்கள். கருத்தரங்கில் வரவேற்புரை ஆற்றிய துணைத் தலைமைப் பொறியாளர் கடந்த பல ஆண்டுகளாக கிடைக்காதப் பதவி உயர்வு கடந்த 2 ஆண்டுகளில் கிடைத்துள்ளது.

தமிழ்நாடு பொதுப்பணித்துறையில் மின் பணிகளுக்கென, சுமார் 1000 மின் ஒப்பந்தக்காரர்கள் உள்ளனர். ஏற்கெனவே, நடைமுறையிலிருந்த சிவில் மற்றும் மின் பணிகளுக்கு ஒரே ஒப்பந்தத்தின் வாயிலாக (Package Tender) மேற்கொள்ளப்படும் வகையில் வெளியிடப்பட்ட அரசாணையினை ரத்து செய்து, சிறு மற்றும் குறு மின் ஒப்பந்தக்காரர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்கு உரிய தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வண்ணம், இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், ரூ.15 கோடி வரை உள்ள சிவில் மற்றும் மின் பணிகளுக்கு தனித்தனியாக ஒப்பந்தம் (Separate Agreement) மேற்கொள்ளுவதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டது.



**அனைவருக்கும் பாராட்டு!**

தமிழ்நாடு பொதுப்பணித்துறையின் ஒரு அங்கமாக, மின் அலகு தன் கடமையை செவ்வனே நிறைவேற்றி வருகிறது. இது மேலும், சிறப்பாகவும், கடமையுணர்வுடன் அனைவரும் பாராட்டும் வகையில் செயலாற்ற வாழ்த்துகள்.

மின் பொறியாளர்களின் பணியில் சிலசமயங்களில் குறைபாடு ஏற்பட்டுள்ளது. சென்னை அரசு இராஜீவ் காந்தி மருத்து வமனையில் மின் தடை ஏற்பட்டு, ஜெனரேட்டர் பாதிக்கப்பட்டது. உடனடியாக ஜெனரேட்டர் பொருத்தப்பட்டு, மின் இணைப்பு சரி செய்யப்பட்டாலும், இது போன்று நிகழ்வுகள் வருங்காலங்களில் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதேபோல, சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையிலும் மின்தடை ஏற்பட்டாலும் உடனடியாக சரிசெய்யப்பட்டு, நோயாளிகள் பாதிக்கப்படாத வகையில், மின் இணைப்பு வழங்கப்பட்டதை பாராட்டுகிறேன்.

கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவனை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரை, கீழடி அருங்காட்சியகம், மெரினாவில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவகம், கேரளாவில் உள்ள வைக்கம் தந்தைப் பெரியார் நினைவகம் மற்றும் நூலகங்கள் போன்ற வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களில் மின் இணைப்பு மற்றும் ஒலி ஒளி அமைப்பு பாராட்டும் வகையில் இருந்தது.

மாநிலம் முழுவதும் முக்கிய, மிகமுக்கிய விருந்தினர் வருகையின்போது, தேவைப்படும் அனைத்து மின் இணைப்பு ஒலி ஒளி அமைப்பு, பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி, தொய்வின்றி விழாக்கள் நடைபெற மின் அலகு மிகமுக்கிய பங்கு வகித்ததற்குப் பாராட்டு.

மின்தூக்கியை பராமரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். சிறப்பு விருந்தினர்கள் தங்கும் இடங்களில் எல்லாம் மின்தூக்கி(Lift) அமைக்கவும், மருத்துவமனைகளில் பழைய பழுதடைந்த மின் தூக்கிகளை மாற்றி, புதிய மின் தூக்கிகள் அமைக்கவேண்டும்.

தொழில்நுட்பம் பல வகையில் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. பொறியாளர்கள் தரையிலிருந்து ஆகாயம் வரை தொழில்நுட்பப் பணிகளைப் பார்க்கக் கூடியவர்கள். ஆனால், மருத்துவர்கள் மனிதர்களுக்கு மட்டுமே மருத்துவம் செய்ய இயலும். மின்பொறியார்களின் ஆற்றலுக்குப் பாராட்டு. மின் பொறியாளர்கள் பரிணாம வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஆற்றலை வளர்த்து கொண்டே புதிய உதவிப் பொறியாளர்களுக்கு இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ. வேலு கூறினார்.

இந்தக் கருத்தரங்கில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப் பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி. சத்தியமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், இணைத் தலைமைச்செயற்பொறியாளர் (மின் அலகு) தில்லைக்கரசி, கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின்

# அமுதம் அங்காடிகள் மூலம் ரூ.999-க்கு 20 மளிகைப் பொருட்கள்!

## விற்பனையை - அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச. 20 -

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் மக்கள் அங்காடிகள் மூலம் ரூ.999/ விலையில் 20 மளிகைப் பொருட்கள் அடங்கிய கிறிஸ்துமஸ் / புத்தாண்டு சிறப்பு மளிகைத் தொகுப்பு விற்பனைத் திட்டத்தினை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் உழவர் பெருமக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1972ல் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொன்விழா ஆண்டினைக் கொண்டாடி, பொதுவிநியோகம் மற்றும் சிறப்பு பொது விநியோகத்திட்டப் பொருட்களைக் கொள்முதல் செய்து கிடங்குகளில் இருப்பு வைத்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகித்து, இந்தியாவிற்கே முன்னோடியாக பொதுவிநியோகத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

வெளிச்சந்தை விலையினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் துவக்கப்பட்ட அமுதம் பல்பொருள் அங்காடிகளில் முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை கோபாலபுரம் மற்றும் அண்ணாநகரில் இயங்கி வரும் அங்காடிகள் முதற்கட்டமாக நவீனமயமாக்கப்பட்டு துணை முதலமைச்சர் மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, தரம்/சரியான விலை/ உங்களின் தேர்வு என்ற வகையில் பொதுமக்களின் ஆதரவுடன் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் 22.10.2024 அன்று தீபாவளியை முன்னிட்டு ரூ.499/ விலையில் ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான 15 மளிகைப் பொருட்கள் அடங்கிய அமுதம் பிளஸ் மளிகைத் தொகுப்பு விற்பனைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டு, பொது மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்று வருகிறது.

மேலும், எதிர்வரும் கிறிஸ்துமஸ்/ஆங்கிலப் புத்தாண்டினைக் கவனத்தில் கொண்டு இல்லங்களில் மகிழ்ச்சியுடன் கொண்டாடிட, அதிகபட்ச விற்பனை விலை ரூ.1392/ உள்ள 20 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை ரூ.999/ என்ற விலையில் கிறிஸ்துமஸ்/புத்தாண்டு சிறப்பு மளிகைத் தொகுப்பாக விற்க முடிவு செய்யப்பட்டு நேற்று முன்தினம் (18.12.2024) அதன் விற்பனையை சென்னை அண்ணாநகர் அமுதம் மக்கள் அங்காடியில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார். மஞ்சள்தூள், சர்க்கரை, பாஸ்மதி அரிசி, ரவை, மைதா, ஆட்டா, சூரியகாந்தி எண்ணெய், அமுதம் ஸ்பெசல் (பட்டை, இலவங்கம், ஏலக்காய், பிரியாணி இலை, மராட்டி மொக்கு, கல்பாசி) வெல்லம், நெய், சேமியா, முறுக்கு மாவு, அதிரசமாவு, பிரியாணி மசாலா, கரம் மசாலா, சாம்பார் பொடி, இட்லி பொடி, பெருங்காயத்தூள், சிக்கன் 65 மசாலா, மீன் மசாலா ஆகிய பொருட்கள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

இந்த சிறப்பு மளிகைத் தொகுப்பின் விற்பனை முதற்கட்டமாக சென்னை அண்ணா நகர், கோபாலபுரம் அமுதம் மக்கள் அங்காடிகளில் செயல்படுத்தப்படுகிறது. கிறிஸ்துமஸ் /ஆங்கிலப் புத்தாண்டு சிறப்பு மளிகைத் தொகுப்பு விற்பனைத் தொடக்க விழா கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், மருத்துவர் ஜெ.ராதாகிருஷ்ணன், தலைமையிலும், துணை மேயர் மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, பெருநகர சென்னை மாநகராட்சி 102வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி இராணி இரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் இயக்குநர் த.மோகன், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு-

## வாகை சந்திரசேகர் வேண்டுகோள்!

சென்னை, டிச. 20 -

கழக கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு மாநிலத் தலைவர் வாகை சந்திரசேகர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: -

நில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதற்கு இணங்க மாநில அளவிலான ஒப்பித்தல் போட்டி வரும் 4.1.2025 அன்று அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற உள்ளது. இதனை பள்ளிகளுக்கு தெரிவிக்கவும், மேலும், போட்டி நடத்தாமல் உள்ள மாவட்டங்களில் நடத்தி முடித்திடவும் வேண்டுகிறேன்.

மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட மூன்று மாணவர்களையும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் காலை 9 மணிக்குள் அரங்கத்திற்கு அழைத்து வர வேண்டுகிறேன்.

இவ்வாறு தலைவர் - கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# “திராவிட இயக்க அறிவுக் கருவூலம்”

## இனமானப் பேராசிரியர்

அறிஞர் அண்ணாவால்
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்
கண்டெடுத்த நல்முத்து
இனவுணர்வு மொழியுணர்வு -
கொள்கை உணர்வு
அனைத்தையும் இதயத்தில் ஏந்தி,
அவற்றைப் பரப்பிட உறுதிபூண்டு,
எண்பதாண்டு காலம் தொண்டாற்றி
வெற்றி கண்ட இனமானப் பேராசிரியர்

பொதிகை மலைத் தென்றல் !
உன் நாக்கு தமிழ் மணந்ததால்
கழக நந்தவனம் செழித்தோங்கியது.

உன் வாக்குத் திறத்தாலே
வஞ்சனைப் பகை அனைத்தும் பறந்தன !
பள்ளம்தான் தமிழர் வாழ்வில்
விழலாமா என்று _ உன் உள்ளம்தான்
கொதித் தெழுந்ததால் புது வெள்ளம்தான்
உந்தன் பேச்சு !
வீரம் செய்கின்ற
இனத்தின் மூச்சு !



பெரியாரின் பிள்ளைகளாக -
அண்ணாவின் தம்பிகளாக -
என்றும் பிரிய முடியாத (நம்)
இரு வண்ணக் கொடியாக
கலைஞரெனும்
கோப்பெருஞ்சோழனுக்கு
ஓர் பிசிராந்தையாராக வாழ்ந்திட்ட
இனமானம் போற்றிய பேராசிரியர் புகழ்
தமிழ் நிலம் உள்ளளவும்
நிலைத்து வாழும்.

**க.வை. இராமகிருட்டினன்**
செயலர் -அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம் - மதுரை



திருப்பூர் மாநகராட்சி, 52வது வார்டு, தென்னம்பாளையம் மற்றும் முத்தையன் நகர் பகுதியில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி (அங்கன்வாடி) மையங்களை திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் மாநகர செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன் ( திருப்பூர் தெற்கு), மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் (திருப்பூர் வடக்கு), துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் ஜி.கே.நந்தினி, பகுதி செயலாளர்கள் மியாமி ஆ.அய்யப்பன், மு.க.உசேன், வட்டக் கழகச் செயலாளர்கள் மு.நந்தகோபால், பொ.ஆனந்த், உள்பட மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தாட்கோ மாவட்ட மேலாளர்கள் ஆய்வுக் கூட்டம்

## அமைச்சர் மா.மதிவேந்தன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, டிச. 20 -

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர்.மா.மதிவேந்தன் தலைமையில் சென்னை தாட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கத்தில் தாட்கோ மாவட்ட மேலாளர்கள் மற்றும் செயற் பொறியாளர்களுடன் தாட்கோவில் நடை பெற்றுவரும் திட்டப்பணிகளின் செயல்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் (18.12.2024) ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து அவர்களின் கல்வி அறிவு மற்றும் சமூக பொருளாதார நிலையினை உயர்த்திட முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக முதலமைச்சரின் ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு (CM ARISE) திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய கடன் உதவி, இளைஞர்களுக்கான சுயதொழில், மற்றும் வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், மேலும் ஏழை எளிய விவசாய மகளிரின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட நன்னிலம் நிலம் உடைமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மற்றும் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளை மாவட்ட மேலாளர்களுடன் ஆய்வு நடத்தினார்.

தாட்கோவில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர் பள்ளிகள், விடுதிகள், மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்திடவும், நவீன சமுதாயக் கூடங்கள் பணிகளையும் ஒன்றிய அரசு நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறும் அமைச்சர் மா.மதிவேந்தன் கேட்டுக்கொண்டார்கள்.


இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழக தலைவர் உ.மதிவாணன் , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழக மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி மற்றும் அனைத்து மாவட்ட மேலாளர்கள், செயற்பொறியாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி ஒன்றிய நகர தி.மு.க. சார்பில் இனமானப் பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், செஞ்சி மேற்கு ஒன்றியச் செயலாளர் பச்சையப்பன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகரச் செயலாளர் கார்த்தி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தேவதானம்பட்டி தே.க. இராஜேந்திரன்
## டிசம்பர் 20 (1996)



கழகம் தொடங்கிய காலம் முதல் உறுப்பினராகி, நாடகத்தின் மூலம் கழகக் கொள்கைகளைப் பரப்பி, தீவிர கழகப் பணியாற்றியவர்.

தேவதானப்பட்டி கிளைச் செயலாளராகவும் – பேரூர்க் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தேவதானப்பட்டி பேரூராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**